தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 247 | 4 Pages | 4.4.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 247 | 4 பக்கங்கள் | 4.4.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி**

**விளக்கம்:**
**கற்க வேண்டிய வற்றைக் கற்று இங்கு மெய்ப்பொருளைஉணர்ந்தவர், மீண்டும் இப்பிறப்பிற்கு வராத வழியை அடைவர்.**

# வக்பு சட்ட திருத்த மசோதா நிறைவேற்றம்: இந்திய அரசமைப்பு சட்டம் மீதான தாக்குதல் - முதலமைச்சர்

சென்னை ஏப்4

முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தி.மு.க., மற்றும் அதன் கூட்டணி கட்சி எம்.எல்.ஏக்கள் கருப்பு பட்டை அணிந்து இன்றைய சட்டப்பேரவை நிகழ்வில் பங்கேற்றுள்ளனர். நாடாளுமன்றத்தில் வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவர்கள் கருப்பு பட்டை அணிந்து வந்துள்ளனர். இந்த நிலையில் சட்டசபை கூட்டம் தொடங்கியவுடன் வக்பு சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளதைக் கண்டித்து, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

கடந்த 27032025 அன்று இந்த மாமன்றத்தில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். இந்தியத் திருநாட்டின் மத நல்லிணக்கத்திற்கும் சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995ம் ஆண்டின் வக்பு சட்டத்தினைத் திருத்துவதற்கு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு சட்டத் திருத்த முன்வரைவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்ற தீர்மானம் பா.ஜ.க. நீங்கலாக அனைத்துக் கட்சிகளாலும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டு நிறைவேற்றப்பட்டது.

இந்தியாவில் இருக்கும் பெரும்பாலான அரசியல் கட்சிகளால் இந்த வக்பு சட்டத் திருத்தம் எதிர்க்கப்பட்டது. இவை அனைத்தையும் மீறி நாடாளுமன்ற மக்களவையில் வக்பு சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட்டிருப்பது மிகுந்த கண்டனத்துக்குரியது. வக்பு சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிராக 232 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள். ஆதரவாக 288 உறுப்பினர்கள் வாக்களித்துள்ளார்கள். இந்தச் சட்டத் திருத்த மசோதாவானது நிறைவேற்றப்பட்டு இருந்தாலும் எதிர்த்து வாக்களித்தவர்களின் எண்ணிக்கை 232 என்பது சாதாரணமான எண்ணிக்கை அல்ல. ஆனால், இந்தச் சட்டத் திருத்தம் எதிர்க்கப்பட வேண்டியது மட்டுமல்ல; முழுமையாகத் திரும்பப் பெற வேண்டியது என்பதுதான் நம் கருத்து. அதைத்தான் நாம் இங்கே தீர்மானமாக நிறைவேற்றி அனுப்பியிருந்தோம்.



இந்தியாவில் இருக்கும் பெரும்பான்மைக் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி ஒரு சில கூட்டணிக் கட்சிகளின் தயவால் அதிகாலை 2 மணியளவில் இத்தகைய சட்டத்தை நிறைவேற்றி இருப்பது இந்திய அரசியல் சட்டத்தின் கட்டமைப்பின் மீது செய்யப்பட்ட தாக்குதல்; மதநல்லிணக்கத்தைக் குலைக்கும் செயல். இதனை உணர்த்தும் வகையில் கருப்பு பட்டையை அணிந்து இன்றைய பேரவை நடவடிக்கைகளில் நாங்கள் பங்கெடுக்கிறோம்.

சர்ச்சைக்குரிய இந்த சட்டத்திருத்தத்துக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டில் தி.மு.க. சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்படும். வக்பு வாரியத்தின் தன்னாட்சியை அழித்து, சிறுபான்மை இஸ்லாமிய மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் மத்திய அரசின் சட்டத்துக்கு எதிராக தமிழ்நாடு போராடும்! அதில் வெற்றியும் பெறும். அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான தாக்குதலை சட்டபூர்வமாகவே தடுப்போம் என்று இந்த மாமன்றத்தில் உறுதி அளிக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

வக்பு வாரிய சட்ட திருத்த மசோதா குறித்த விவாதம் நடைபெற்று வரும் நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

## உலக பணக்காரர்கள் பட்டியல்: 18 வது இடத்திற்கு தள்ளப்பட்ட அம்பானி: முதல் இடத்தில் யார்..?



வாஷிங்டன், ஏப்.4

பிரபல போர்ப்ஸ் பத்திரிக்கை 39 வது உலக பணக்காரர்கள் பட்டியலை வெளியிட்டு உள்ளது. இதில் 3,000க்கும் அதிகமானோர் இடம் பிடித்துள்ளனர். போர்ப்ஸ் வெளியிட்டுள்ள உலக பணக்காரர்கள் பட்டியலில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 247 பேர் கூடுதலாக இடம் பிடித்துள்ளனர்.

போர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ள பட்டியலில்,

உலகபணக்காரர்கள்பட்டியலில்முதலிடத்தில்இருப்பவர்டெஸ்லா நிறுவன சிஇஓ எலான் மஸ்க். அவருடைய சொத்து மதிப்பு 342 பில்லியன் அமெரிக்க டாலர்களாகும். கடந்த ஓராண்டு காலத்தில் இவரின் சொத்து மதிப்பில் 147 பில்லியன் டாலர்கள் சேர்ந்திருப்பதாக போர்ப்ஸ் கூறுகிறது. அமெரிக்க அரசின் செயல் திறன் துறையின் தலைவராகவும் இவர் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக மெட்டா நிறுவனத்தின் தலைவர் மார்க் ஜுக்கர்பர்க் 216 பில்லியன் அமெரிக்க டாலர்கள் சொத்து மதிப்புடன் இரண்டாவது இடத்தில் இருக்கிறார். முதல் முறையாக இவர் இந்த பட்டியலில் இரண்டாம் இடத்தை பிடித்திருக்கிறார். அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் 215 பில்லியன் அமெரிக்க டாலர்கள் சொத்து மதிப்புடன் மூன்றாவது இடத்தையும், ஓராக்கில் நிறுவனத்தின் லாரி எலிசன் 192 பில்லியன் அமெரிக்க டாலர்கள் சொத்து மதிப்போடு நான்காவது இடத்தையும் பிடித்துள்ளார். 178 பில்லியன் அமெரிக்க டாலர்களோடு அர்னார்டு பெர்னால்ட் இந்த பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இருக்கிறார்.

உலக அளவில் அமெரிக்காவில் தான் அதிக பில்லியனியர்கள் இருக்கின்றனர். அமெரிக்காவில் 902 பில்லினியர்களும், சீனாவில் 516 பில்லினியர்களும் இருக்கின்றனர். இந்தியாவில் 205 பில்லியனியர்கள் இடம்பெற்றுள்ளனர். பிரபல ஹாலிவுட் நடிகர் அர்னால்டு முதன்முறையாகஉலகபணக்காரர்கள்பட்டியலில்இடம்பிடித்துள்ளார். டாப் 10 பட்டியலில் பெரும்பாலானவர்கள் அமெரிக்காவை சேர்ந்தவர்களாகவே உள்ளனர்.

ரிலையன்ஸ் குழுமத் தலைவர் முகேஷ் அம்பானி இந்த பட்டியலில் 18ம் இடம் பிடித்துள்ளார். கடந்தாண்டு 116 பில்லியன் டாலராக இருந்த அம்பானியின் சொத்து மதிப்பு தற்போது 92.5 பில்லியன் டாலராக குறைந்துள்ளது. அடுத்ததாக கவுதம் அதானி 28 வது இடத்தை பிடித்திருக்கிறார். அவருடைய சொத்து மதிப்பு 56.3 பில்லியன் டாலர்களாக இருக்கிறது.

## தங்கத்தின் விலை அதிரடியாக குறையுமா..? வெளியான பரபரப்பு தகவல்

வாஷிங்டன், ஏப்.4

கடந்த சில மாதங்களில் வரலாறு காணாத உச்சத்தை எட்டியுள்ள தங்கத்தின் விலை உயர்வு, முதலீட்டாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருந்தாலும், நகைகளை வாங்கும் நுகர்வோருக்கு பெரும் சுமையாக உள்ளது. இந்நிலையில், தங்கம் விலையில் குறிப்பிடத்தக்க சரிவு வரக்கூடும்என்றும், இதுவாங்குபவர்களுக்குநிவாரணம்அளிக்கக்கூடும் என்றும் சந்தை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதன்படி இனி வரும் நாட்களில் தங்கம் விலை 38 சதவீதம் வரை குறைய வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது. அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிதிச் சேவை நிறுவனமான மார்னிங்ஸ்டாரின் சந்தைநிபுணர்ஜான்மில்ஸ் இதனைதெரிவித்திருக்கிறார். ஒருஅவுன்ஸ் $3,080 இருந்து $1,820 வரை குறையலாம் என்றும் அவர் கணித்திருக்கிறார்.

மார்ச் 31ம் தேதி நிலவரப்படி 24 காரட் தங்கத்தின் விலை 10 கிராம் ரூ.89,510 என்று இருந்தது. இந்த விலை ரூ.55,496 ஆகக் குறையலாம் என கணிக்கப்பட்டிருக்கிறது.

உலகமே அமெரிக்க பொருளாதார சந்தையை அடிப்படையாக கொண்டு இயங்கி வருகிறது. ஆனால் அமெரிக்காவின் பொருளாதாரத்தில் டிரம்ப் வந்த பிறகு பல மாற்றங்கள் எற்பட்டிருக்கின்றன. இதுவும் தங்கம் விலை உயர்வுக்கு காரணமாகும். டிரம்பின் வரி நடவடிக்கை கூட விலை உயர்வுக்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

தங்கத்தின் விலையில் தற்போது ஏற்ற இறக்கமான போக்கு இருந்தபோதிலும், மில்ஸ் மற்றும் பிற சந்தை ஆய்வாளர்கள், தங்க விலை வரும் நாட்களில் கூர்மையான சரிவை சந்திக்க கூடும் என்று தெரிவித்துள்ளனர்.

உலகளவில் தங்க சேமிப்பு 9 சதவீதம் அதிகரித்து 2,16,265 டன்னாக உயர்ந்திருக்கிறது. குறிப்பாக ஆஸ்திரேலியா தங்கம் உற்பத்தியை அதிகரித்திருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள நாடுகளில் இருக்கும் மத்திய வங்கிகளில் தங்கம் 1,000 டன்னுக்கும் அதிகமாக இருப்பு இருக்கிறது. எனவே மேலும் அதிகமாக தங்கத்தை வாங்க வங்கிகள் விருப்பம் காட்டவில்லை.

இதுதொடர்பான ஆய்வு ஒன்றில் 71 சதவீத வங்கிகள் தங்கத்தை வாங்கி குவிக்க விரும்பவில்லை என்று கூறியிருக்கின்றன. எனவே தங்கத்தின் தேவை குறைய தொடங்கி உள்ளது. முதலீட்டாளர்களும் கொஞ்ச காலத்தில் தங்கத்திற்கு மாற்றாக வேறு ஒரு விஷயத்தில் முதலீடு செய்ய தொடங்குவார்கள். இதனால் விலை மளமளவென குறையும் என்று சந்தை ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



சுண்டக்கம்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளியில் பாரத சாரணர் இயக்கம் பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சிக்கு மாவட்ட உதவி ஆணையர் திரு ராஜாராம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பான பயிற்சி வழங்கினார். குன்னத்தூர் ரோட்டரி கிளப் சார்பாக திரு பார்த்திபன், குன்னத்தூர் ரோட்டரி கிளப் தலைவர் சுரேஷ்குமார் ஆகியோர்கலந்து கொண்டு சிறப்பாக செயல்படும் மாணவர்களுக்கு ரோட்டரி சார்பில் ஸ்கவுட் சீருடை வழங்கப்படும் என்று தெரிவித்தனர். மேலும் பயிற்சியில் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக பள்ளியின் தலைமை ஆசிரியர் காளியப்பன் அனைவரையும் வரவேற்றார். சிவகுமார் ஒருங்கிணைப்பு செய்தார். திரு ரங்கநாதன் பயிற்சி முடிவில் நன்றி கூறினார்.



மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பாக மதுரை மாநகர் பாஜக வழக்கறிஞர் பிரிவு சார்பாக நீர்மோர் பந்தல் திறப்பு விழா இதில் மதுரை மாவட்ட வழக்கறிஞர் பிரிவு மாவட்டத் தலைவரும் மத்திய அரசு வழக்கறிஞருமான அய்யப்ப ராஜா தலைமையில் நடைபெற்றது . இந்த நீர் மோர் பந்தல் இம்மாதம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும் என்றும் கூறியுள்ளார்.இந்த நீர்மோர் பந்தலை மதுரை மாநகர் பாஜக மாவட்ட தலைவர் மாரி சக்கரவர்த்தி துவக்கி வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கினார். இதில் வழக்கறிஞர்கள் மற்றும் பாஜக நிர்வாகிகள், தொண்டர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## சட்ட விரோதமாக சிதம்பரத்தில் வசித்து வந்த வங்கதேசத்தை சேர்ந்த 8 பேர் கைது



கடலூர், ஏப்.4

கடலூர் மாவட்ட போலீசாருக்கு சட்ட விரோதமாக வங்கதேசத்தை சேர்ந்த சிலர் சிதம்பரம் பகுதியில் தங்கி இருந்து கட்டிட வேலை செய்து வந்ததாக தகவல் கிடைத்தது.


இதன் அடிப்படையில் சிதம்பரத்திற்கு விரைந்த போலீசார், அங்கு தங்கியிருந்து கட்டிட வேலை செய்து வந்த வங்கதேசத்தை சேர்ந்த 8 பேரை கைது செய்தனர்.மேலும் அவர்களிடம் இருந்து போலி ஆதார் அட்டை உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டது.

இதனையடுத்து அறிமுகம் இல்லாத நபர்களுக்கு உரிய பின்னணியை ஆராயாமல் வேலை அளிக்கக் கூடாது என கட்டுமான ஒப்பந்ததாரர்களுக்கு போலீசார் அறிவுறுத்தினர்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066




## புகழ் பெற்ற வித்யா கிரி கலை அறிவியல் கல்லூரி 2ம் பட்டமளிப்பு விழா



காரைக்குடி அருகே புதுவயல் வீரசேகரபுரம் வித்யா கிரி கலை அறிவியல் கல்லூரியின் 2ம் பட்டமளிப்பு விழா வரும் ஏப்ரல் 5ம் தேதி காலை 10:35 மணி அளவில் அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில், கல்லூரி தாளாளர் மற்றும் முதல்வர் டாக்டர் ஆர் சுவாமிநாதன் தலைமையில் நடைபெறுகிறது. தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், அழகப்பா பல்கலை. துணைவேந்தர் பேரா.முனைவர் க.ரவி, ஆகியோர் பட்டங்கள் வழங்கி விழா பேருரை ஆற்றுகின்றனர்.

கல்லூரி கல்வி குழு தலைவர் கிருஷ்ணன் பொருளாளர் ஹாஜி முஹம்மது மீரா, முதன்மை நிர்வாக அதிகாரி ஐஸ்வர்யா சரன்சுந்தர், ஆசிரியர்கள், மாணவ மாணவியர் கலந்து கொள்கின்றனர்.

## தாராபுரத்தில் மின் நுகர்வோர் குறை தீர்க்கும் சிறப்பு முகாம்

தாராபுரம்,ஏப்4

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் மின்வாரிய செயற்பொறியாளர் கேசவராஜ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது, தாராபுரம் மின் கோட்டத்திற்குட்பட்ட மின் நுகர்வோர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் மின் கட்டணத் தொகை குறைபாடு, மின்னழுத்த குறைபாடு, பழுதான மின் மீட்டர்கள், சேதமடைந்த மின் கம்பங்களை மாற்றுதல் உள்ளிட்ட அனைத்து மின்சாரம் தொடர்பான புகார்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு நாளை (05.04.2025 சனிக்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தாராபுரம் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலக வளாகத்தில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. ஆகவே மின் நுகர்வோர் மற்றும் பொதுமக்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு மின்சாரம் சம்பந்தமான தங்களது குறைகளை தெரிவித்து பயன்பெறலாம் என்று கூறப்பட்டுள்ளது.

# கலசப்பாக்கம் அருகே இன்று சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் பங்குனி பிரம்மோற்சவம் துவக்கம்



கலசப்பாக்கம், ஏப்.4

கலசப்பாக்கம் அருகே சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் பங்குனி மாத பிரம்மோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் அடுத்த எலத்தூர்மோட்டூர் நட்சத்திர கோயில் பகுதியில் உள்ள சுயம்பு சிவ சுப்பிரமணிய சுவாமி கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. இக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாத பிரம்மோற்சவம் வெகு சிறப்பாக கொண்டாடப்படும். அதன்படி இந்தாண்டு பிரம்மோற்சவம் இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. அதிகாலை 4.30 மணியளவில் நடை திறக்கப்பட்டு சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. பின்னர் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை நடந்தது.

இதைத்தொடர்ந்து உற்சவ மூர்த்திகளான விநாயகர், வள்ளி தெய்வானை சமேத சிவசுப்பிரமணிய சுவாமி சிறப்பு அலங்காரத்தில் கொடிமரம் முன்பு எழுந்தருளினர். 7.30 மணியளவில் சிவாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க பிரம்மோற்சவ கொடியை ஏற்றினர். தொடர்ந்து கொடிமரம் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் 'அரோகரா, அரோகரா' என பக்தியுடன் தரிசனம் செய்தனர். பிரம்மோற்சவத்தையொட்டி தினமும் சுவாமி இரவில் பல்வேறு வாகனங்களில் வீதியுலா நடைபெறும். முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 8ம் தேதியும், சுவாமி திருக்கல்யாணம் 10ம் தேதியும் நடைபெற உள்ளது. 12ம் தேதி கொடியிறக்கத்துடன் பிரம்மோற்சவம் நிறைவு பெறுகிறது.

# விருதுநகரில் பயங்கர தீ: 20 வீடுகள் எரிந்து நாசம்; ரூ.பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதம் - காஸ் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதால் பரபரப்பு



விருதுநகர், ஏப்.4

விருதுநகர் பேட்டை பகுதியில் இன்று அதிகாலை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் தகர, குடிசை வீடுகள் என 20க்கும் மேற்பட்ட வீடுகள், அவைகளில் இருந்து ரூ.பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாகின. இது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். விருதுநகர் சிவன்கோயில் பகுதியில், பெருமாள் கோயில் தெரு பேட்டை உள்ளது. இப்பகுதியில் 50க்கும் மேற்பட்ட குடிசை மற்றும் தகர வீடுகள் உள்ளன. இவைகளில் 200க்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். பெரும்பாலும் கூலித் தொழிலாளர்களாகவே உள்ளனர். இந்நிலையில், பேட்டை பகுதியில் உள்ள ராஜா என்பவரது குடிசை வீட்டில் இன்று அதிகாலை 4 மணியளவில் திடீரென தீப்பற்றியது.

காற்றின் வேகத்தில் மளமளவென பரவிய தீ, அக்கம்பக்கத்தில் இருந்த 20க்கும் மேற்பட்ட வீடுகளில் பற்றி எரிந்தது. தீப் பிடிக்கத் தொடங்கியவுடன் வீடுகளில் தூங்கிக் கொண்டிருந்த பொதுமக்கள் அலறியடித்து வெளியேறினர். மேலும், வீடுகளில் இருந்த காஸ் சிலிண்டர்கள் வெடித்துச் சிதறியதால் பரபரப்பு ஏற்பட்டது. வீடுகளின் அருகில் இருந்த பால் பண்ணை ஒன்றிலும் தீ பரவியது. இதையடுத்து அங்கிருந்த 10க்கும் மேற்பட்ட மாடுகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டன. இது குறித்து தகவலறிந்த விருதுநகர் தீயணைப்புத்துறை வீரர்கள் 10க்கும் மேற்பட்டோர், 2 தீயணைப்பு வாகனங்களில் வந்து, தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணி நேர போராட்டத்துக்கு பின் தீயை முழுமையாக அணைத்தனர். இந்த தீ விபத்தில் 20க்கும் மேற்பட்ட வீடுகள், அவைகளில் இருந்த ரூ.பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசமாகின. அதிர்ஷ்டவசமாக யாருக்கும் உயிரிழப்பு ஏற்படவில்லை. இது குறித்து விருதுநகர் பஜார் காவல்நிலைய போலீசார் வழக்குப்பதிந்து, 'மின்கசிவால் தீப் பிடித்ததா அல்லது வேறு ஏதேனும் காரணமா என விசாரித்து வருகின்றனர். விருதுநகரில் அதிகாலையில் ஏற்பட்ட தீ விபத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# சென்னை காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாம்



சென்னை, ஏப்.4

சென்னை பெருநகர காவல் ஆணையாளர், காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர் முகாமில் 22 பொதுமக்களின் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். சென்னைகாவல் ஆணையாளர் ஆ.அருண், சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார்மனுக்களைபெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், இன்று (02.04.2025) புதன்கிழமை காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த 22 பொதுமக்களிடம் இருந்து புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# காட்பாடி விளையாட்டு மைதானத்தில் கோடை கால நீச்சல் பயிற்சி வகுப்பு தொடங்கியது



வேலூர், ஏப்.4

காட்பாடி விளையாட்டு மைதானத்தில் கோடை கால நீச்சல் பயிற்சி வகுப்பு தொடங்கியது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வேலூர் மாவட்ட பிரிவு சார்பில் கோடை கால நீச்சல் பயிற்சி வகுப்புகள் முதற் கட்டமாக காட்பாடி மாவட்ட விளையாட்டு அரங்க நீச்சல் குளத்தில் நேற்று தொடங்கியது. இப்பயிற்சி வரும் ஜூன் 8ம்தேதி வரை 5 கட்டங்களாக நடைபெறுகிறது. சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கு என தனித்தனியே நடத்தப்படுகிறது. முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் விடுமுறை நாளான 7ம்தேதி தவிர்த்து நேற்று (1ம் தேதி) முதல் 13ம்தேதி வரை நடக்கிறது. இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் விடுமுறை நாளான 21ம்தேதி தவிர்த்துஏப்ரல்15ம்தேதி முதல் 27ம் தேதி வரை நடக்கிறது.

3ம் கட்ட பயிற்சி வகுப்புகள் விடுமுறை நாளான மே 5ம் தேதி தவிர்த்து ஏப்ரல் 29ம் தேதி முதல் மே 11ம் தேதி வரை நடக்கிறது. 4ம் கட்ட பயிற்சி வகுப்புகள் விடுமுறை நாளான மே 19ம் தேதி தவிர்த்து மே 13ம் தேதி முதல் 25ம் தேதி வரை நடக்கிறது. 5ம் கட்ட பயிற்சி வகுப்புகள் விடுமுறை நாளான ஜூன் 2ம் தேதி தவிர்த்து மே 27ம் தேதி தொடங்கி ஜூன் 8ம் தேதி வரை நடக்கிறது. இப்பயிற்சி முகாமானது காலை 67, 78, 89 மணி மற்றும் மாலை 45, 56, 67 மணி வரை சிறுவர், சிறுமியர், பெரியவர்கள் மற்றும் பெண்களுக்கு என தனித்தனியாக நடத்தப்படுகிறது.

நீச்சல் பயிற்சி முகாமின் அம்சங்களாக, நீச்சல் தெரியாதவர்களுக்கான நீச்சல் பயிற்சி, நீச்சல் தெரிந்தவர்களுக்கான சிறப்பு நீச்சல் பயிற்சி, உடல் எடை குறைவதற்கான நீச்சல் பயிற்சி எனதனித்தனியே பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சிக்கான கட்டணமாக சரக்கு மற்றும் சேவை வரியுடன் ரூ.1770 ஆகும். முதற் கட்ட பயிற்சியில் 50 பேர் கலந்து கொண்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மின்வாரியம் சார்பில் ஏப்.5ம் தேதி தமிழ்நாடு முழுவதும் சிறப்பு முகாம் நடைபெறும் என்று அறிவிப்பு

சென்னை, ஏப்.4

தமிழ்நாடு மின்வாரியம் சார்பில் ஏப்.5ம் தேதி தமிழ்நாடு முழுவதும் சிறப்பு முகாம் நடைபெறும் என்று அறிவிக்கபட்டுள்ளது.

மின் நுகர்வோர் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மின் கட்டணத் தொகை, மின் மீட்டர்கள், குறைந்த மின்னழுத்தம், சேதமடைந்த மின் கம்பங்கள் மாற்றுதல் உள்ளிட்ட அனைத்து மின்சாரம் தொடர்பான புகார்கள் இருப்பின், அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு, வரும் 05.04.2025 சனிக்கிழமை அன்று காலை 11.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தமிழகத்தில் உள்ள அனைத்து மின்வாரிய செயற்பொறியாளர்கள்/இ&ப (Executive Engineer/O&M Office) அலுவலகங்களிலும் ஒரு நாள் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பெறப்படும் மின் மீட்டர்கள், குறைந்த மின்னழுத்தம், சேதமடைந்த மின் கம்பங்கள் மாற்றுதல் உள்ளிட்ட அனைத்து மின்சாரம் தொடர்பான புகார்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு நுகர்வோர் மற்றும் பொதுமக்களுக்கு தீர்வு தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்படும். மின் நுகர்வோர் மற்றும் பொதுமக்கள் இந்த முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு மின்வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

# மூணாறு அருகே பண்ணையில் கொத்து, கொத்தாக இறந்து கிடந்த கோழிகள்: வனத்துறை விசாரணை



மூணாறு, ஏப்.4

மூணாறு அருகே, பண்ணையில் கொத்து, கொத்தாக 1,000 கோழிகள் வரை இறந்து கிடந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மர்மவிலங்குகள் தாக்கியதா அல்லது தீவனத்தில் எதுவும் விஷம் கலந்ததா என வனத்துறையினர் விசாரித்து வருகின்றனர். கேரளா மாநிலம், இடுக்கி மாவட்டம், மூணாறு அருகே உள்ள ராஜாக்காடு பகுதியைச் சேர்ந்தவர் நரேந்திரன். இவர், தனது வீடு அருகே கோழிப்பண்ணை நடத்தி வருகிறார். இந்தப் பண்ணையில் 2,000க்கும் மேற்பட்ட கோழிகளை வளர்த்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு கோழிகளுக்கு வழக்கம் போல தீவனம் வைத்து விட்டு வீட்டிற்கு தூங்கச் சென்றார்.

நேற்று காலை வந்து பார்த்தபோது பண்ணையில் 1,000 கோழிவரை கொத்து, கொத்தாக இறந்து கிடந்தன. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த நரேந்திரன் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்துக்கு வந்த வனத்துறையினர் தீவனத்தில் விஷம் எதுவும் கலந்ததா அல்லது மர்மவிலங்குகள் எதுவும் தாக்கியதா என விசாரணை நடத்தினர். மேலும், விலங்குகளின் தடயங்களை சேகரித்து ஆய்வு செய்தனர். இதில், பூனைகள் அல்லது கீரிகள் கூட்டமாக வந்து கோழிகளை கொன்று இருக்கலாம் என தெரிய வந்துள்ளது. 1000க்கும் மேற்பட்ட கோழிகள் இறந்ததால் உரிமையாளருக்கு ரூ.5 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவித்துள்ளனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் திருக்கல்யாண திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்: ஏற்பாடுகள் தீவிரம்

ஸ்ரீவில்லிபுத்தூர், ஏப்.4

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் திருக்கல்யாண நிகழ்ச்சி நாளை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரில் பிரசித்தி பெற்ற ஆண்டாள் கோயில் உள்ளது. 108 வைணவத் திருத்தலங்களில் மிகமுக்கியத் தலமாக இந்த கோயில் போற்றப்படுகிறது. முக்கிய விஷேச நாட்களில் உள்ளூர் பக்தர்கள் மட்டுமல்லாமல், வெளியூர் பக்தர்களும் ஆயிரக்கணக்கானோர் வந்து தரிசனம் செய்வர். கோயிலில் நடைபெறும் ஆடிப்பூர தேரோட்டம் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். இங்கு நடைபெறும் முக்கியத் திருவிழாக்களில் ஒன்று திருக்கல்யாணம்.

இந்தாண்டு திருக்கல்யாண நிகழ்ச்சி நாளை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. வரும் 11ம் தேதி மாலை 5.30 மணிக்கு மேல் 6.30 மணிக்குள் ஆண்டாள்ரெங்கமன்னார் திருக்கல்யாணம் நடக்கிறது. இதையொட்டி கோயில் நிர்வாகம் சார்பில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கொடியேற்றம் நாளை காலை 10.30 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் நடைபெறும். இதற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழுத் தலைவர் வெங்கட்ராமராஜா மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், நிர்வாக அதிகாரி சக்கரை அம்மாள் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# குன்றக்குடி முருகன் கோயிலில் பங்குனித் திருவிழா கொடியேற்றம்: 10ம் தேதி தேரோட்டம்



காரைக்குடி, ஏப்.4

பிரசித்தி பெற்ற குன்றக்குடி சண்முகநாதர் கோயிலில் பங்குனி உத்திர திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. வரும் 10ம் தேதி தேரோட்டம் நடைபெறுகிறது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அருகே, குன்றக்குடியில் சண்முகநாதப் பெருமான்கோயில் அமைந்துள்ளது. மிகவும் பிரசித்தி பெற்ற இக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழா வெகு விமரிசையாக நடைபெறும். இதன்படி இந்த ஆண்டுக்கான திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக, ஆறுமுக கடவுள் உருவம் கொண்ட கொடிக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டது. புனிதநீர் கலசங்களுடன் யாக பூஜை நடைபெற்றது.

பின்னர், சண்முகநாதர் சன்னதி முன்பு அமைந்துள்ள கொடிமரத்திற்கு சிறப்பு அபிசேகம் செய்யப்பட்டது. இதையடுத்து கொடியேற்றம், சிறப்புதீபாராதனை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்குனி உத்திர திருவிழா மொத்தம் 10 நாட்கள்நடைபெறும். திருவிழாவில் வரும் 10ம் தேதி தேரோட்டம் நடைபெறுகிறது. 11ம் தேதி பங்குனி உத்திரத்தன்றுபக்தர்கள்காவடி, பால்குடம் எடுத்துவந்து நேர்த்திக்கடன் செலுத்துவர்.

# தென்காசி மாவட்டத்திற்கு ஏப்ரல் 7, 11ம் தேதி உள்ளூர் விடுமுறை: மாவட்ட ஆட்சியர் கமல்கிஷோர் அறிவிப்பு



தென்காசி, ஏப்.4

தென்காசி மாவட்டத்தில் அருள்மிகுகாசிவிஸ்வநாதர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் மற்றும் பங்குனி உத்திர திருநாளை முன்னிட்டு 2 நாட்கள் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது; தென்காசி மாவட்டம், காசிவிசுவநாதசுவாமி கோவில் குடமுழுக்கு விழா 2025 ஏப்ரல் 7ம் தேதியும் (திங்கள்கிழமை), பங்குனி உத்திர திருவிழா 2025 ஏப்ரல் 11ம் தேதியும் (வெள்ளிக்கிழமை) ஆகிய 2 நாட்களும் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளி, கல்லூரிகளில் நடைபெற்று வரும் பொதுத்தேர்வுகள் மற்றும் முக்கியத் தேர்வுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில்அனைத்து மாநில அரசு அலுவலகங்களுக்கும், நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை நாட்களாக அறிவித்து மாவட்ட ஆட்சியர் கமல்கிஷோர் உத்தரவிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட நாட்களில் அரசு பொதுத்தேர்வுகள் ஏதேனுமிருப்பின் சம்பந்தப்பட்ட தேர்வு எழுதும் பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுத்தேர்வு தொடர்பாக பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு இந்த உள்ளூர் விடுமுறையானது பொருந்தாது எனவும், மேலும் இம்மாவட்ட கருவூலம், சார்நிலைக்கருவூலங்கள் குறைந்தபட்ச பணியாளர்களை கொண்டு அரசு காப்புகள் (Government Securities) தொடர்பான அவசரப்பணிகளை கவனிப்பதற்காக செயல்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய உள்ளூர்விடுமுறையை சரிசெய்யும் வகையில் 2025 ஏப்ரல் 26 மற்றும் மே 3 ஆகிய இரு சனிக்கிழமைகளும் தென்காசி மாவட்டத்திற்கு வேலை நாட்களாக அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஒன்றிய, மாநில அரசுகள் இணைந்து கச்சத்தீவை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்



சென்னை, ஏப்.4

ஒன்றிய, மாநில அரசுகள் இணைந்து கச்சத்தீவை உடனடியாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கச்சத்தீவை மீட்டெடுப்பதாக இன்று (02.04.2025) தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு தாரை வார்க்கப்பட்ட கச்சத்தீவை மீண்டும் மீட்டெடுப்பதாக தமிழக அரசு சட்டசபையில் இன்று (02.04.2025) தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது.

இதை ஒன்றிய , மாநில அரசுகள் இரண்டும் ஒன்றாக இணைந்து நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், பாதுகாப்பையும் உறுதி படுத்த வேண்டும். அனைவரும் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல், தடையையும் ஏற்படுத்தாமல், உடனடியாக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒருமனதாக நடைமுறைக்கு கொண்டு வந்து கச்சத்தீவை மீட்டெடுக்க வேண்டும்.

பல ஆண்டுகளாக மீனவர்கள்தங்கள்வாழ்க்கை, உயிர், உடைமைகள் எல்லாவற்றையும் இழந்து மிகப்பெரிய இன்னல்களை சந்தித்து வருகின்றனர். மேலும் தமிழக மீனவர்களின் பாதுகாப்பு ஒன்றையே கருத்தில் கொண்டு இந்த தீர்மானத்தை முறைப்படுத்தி, ஏற்கனவே கச்சத்தீவிற்காக போடப்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து, மீண்டும் கச்சத்தீவை நமது இந்தியாவுடன் இணைக்க வேண்டும்.

பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்லும் பொழுது கச்சத்தீவை மீட்டு இந்தியாவுடன் இணைப்பதற்கான ஒப்பந்தத்தை உறுதி செய்ய வேண்டும். மீனவர்களுக்காக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை மேலும் நீட்டிக்காமல் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என தேமுதிக சார்பாக கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# கும்மிடிப்பூண்டி ரயில் சேவையில் மாற்றம்



சென்னை, ஏப்.4

தண்டவாளபராமரிப்பு பணி காரணமாக கும்மிடிப்பூண்டி ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. பொன்னேரி கவரைப்பேட்டை ரயில் நிலையங்களுக்கு இடையே தண்டவாள பராமரிப்பு பணி நடைபெறுகிறது. தண்டவாள பராமரிப்பு பணியால் ஏப்.3, 5ம் தேதிகளில் 21 புறநகர் ரயில்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவிப்பு

# சக்தி மாரியம்மன் கோயில் விழா: அக்னி கரகத்தை வயிற்றில் வைத்து வலம் வந்த பூசாரி



அந்தியூர், ஏப்.4

அந்தியூர் அருகே உள்ள விராலிக்காட்டூர் சக்தி மாரியம்மன் கோயில் விழாவில் பூசாரி வயிற்றின் மேல் அக்னி சட்டியை வைத்து படுத்தபடி கோயிலை வலம் வந்து நேர்த்திக்கடன் செலுத்தினார். ஈரோடு மாவட்டம், அந்தியூர் அடுத்த எண்ணமங்கலம் விராலி காட்டூர் பகுதியில் பிரசித்தி பெற்ற சக்தி மாரியம்மன் கோயில் உள்ளது.

இக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி மாதம் திருவிழா மிக சிறப்பாக நடைபெறும். இந்நிலையில் இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 15 நாட்களுக்கு முன்பு பூச்சாட்டுதலுடன் தொடங்கியது.

இதைத்தொடர்ந்து அன்றாடம் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு வந்தன.

இந்நிலையில், பொங்கல் திருவிழா நடக்கிறது. இதில் நேற்று கோயிலின் முன்பு நடப்பட்ட கம்பத்தில் அக்னி கரகம் வைக்கப்பட்டு அதில் தீமூட்டப்பட்டது. பின்னர் பூசாரி அக்னி சட்டியை வயிற்றில் வைத்துக் கொண்டும், மத்தளம் அடிப்பவர் மத்தளத்தை வயிற்றில் வைத்துக் கொண்டும் படுத்தபடி கோயிலை சுற்றி வலம் வந்தனர். ஆண்டுதோறும் இதுபோன்ற நேர்த்திக்கடனை பூசாரி மற்றும் மத்தளம் அடிப்பவர் தொடர்ந்து செய்து வருகின்றனர். இப்படி செய்வதால், ஊர்மக்கள்நோய் நொடியின்றி செல்வ செழிப்புடன் வாழ்வர் என்பது ஐதீகம். இதனால், இதுபோன்று இந்த ஆண்டு அக்னி சட்டியை பூசாரி வயிற்றின் மேல் வைத்தும், அவருக்கு துணையாக மத்தளம் அடிப்பவர் மத்தளத்தை அடித்துக்கொண்டும் படுத்தபடி, கோயிலை வலம் வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

# ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்து அதிகரிப்பால் கொத்தவரை விலை சரிவு: சாகுபடி செய்த விவசாயிகள் கவலை



ஒட்டன்சத்திரம், ஏப்.4

ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் வரத்து அதிகரிப்பால் கொத்தவரங்காய் கொள்முதல் விலை குறைந்துள்ளது. இதனால், சாகுபடி செய்த விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் பிரசித்தி பெற்ற காந்தி காய்கறி மார்க்கெட் உள்ளது. இங்கிருந்து தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும், கேரளா உள்ளிட்ட அண்டை மாநிலங்களுக்கும் காய்கறிகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. ஒட்டன்சத்திரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் விவசாயிகள்தாங்கள் விளைவிக்கும் காய்கறிகளை, இந்த மார்க்கெட்டில் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இவற்றை சில்லறை மற்றும் மொத்த வியாபாரிகள் வாங்கி வெளியூர்களுக்கு அனுப்புகின்றனர். இந்நிலையில், ஒட்டன்சத்திரம் தாலுகாவில் உள்ள கொத்தயம், கள்ளிமந்தையம், அம்பிளிக்கை, இடையகோட்டை, மண்டவாடி, வடகாடு பகுதிகளில் கொத்தவரங்காய் அதிகளவில் சாகுபடி செய்துள்ளனர். பயிர்விளைந்து கொத்தவரங்காய் பறிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதனால், மார்க்கெட்டிற்கு வரத்து அதிகரித்து கொள்முதல் விலை குறைந்துள்ளது. இங்கிருந்து சென்னை, கோவை, மதுரை உள்ளிட்ட நகரங்களுக்கும், கேரளா மாநிலத்திற்கும் கொத்தவரங்காய் அனுப்பப்படுகிறது. கடந்த மாதம் ரூ.30க்கு கொள்முதல் செய்யப்பட்ட கொத்தவரங்காய் தற்போது ரூ.10க்கு மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

# தமிழகம், புதுச்சேரியில் லாரி டிரைவர்களை வெட்டி அட்டூழியம்; கடலூரில் வழிப்பறி கொள்ளை கும்பல் தலைவன் என்கவுன்டரில் சுட்டுக்கொலை: போலீசாரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்ப முயன்றதால் அதிரடி



கடலூர், ஏப். 4

கடலூர் மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் மூன்று இடங்களில், லாரி டிரைவர்கள் மற்றும் விவசாயியை தாக்கி வழிப்பறி சம்பவத்தில் ஈடுபட்ட கொள்ளை கும்பல் தலைவனை போலீசார் என்கவுன்டரில் சுட்டுகொன்றனர். விழுப்புரம் நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலை 4 வழிச்சாலையாக தரம் உயர்த்தப்பட்ட பிறகு அதிகளவில் வாகனங்கள் சென்று வருகிறது. இந்த சாலையில் நேற்று அதிகாலை லாரியை நிறுத்திவிட்டு தூங்கி கொண்டிருந்த மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஓதவந்தான்குடியைச் சேர்ந்த டிரைவர் பிரபு (43), மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஆவஞ்சேரியைச் சேர்ந்த டிரைவர் மணிமாறன் (35) மற்றும் கடலூர் அருகே உள்ள எம்.புதூர் பகுதியை சேர்ந்த விவசாயி காளிமுத்து (45) ஆகியோரிடம் 2 பைக்குகளில் வந்த 6 பேர் கும்பல் கத்தியாக் தாக்கி ரூ.3 ஆயிரம் ரொக்கப்பணம் மற்றும் ஆண்ட்ராய்டு செல்போன்களை பறித்துச் சென்றுள்ளனர்.

மேலும் ஒரு லாரி டிரைவரிடம் கத்தியை காட்டி மிரட்டிய நிலையில், சக டிரைவர்கள்திரண்டதால் அந்த கும்பல் தப்பித்து விட்டது. கொள்ளையர்கள் தாக்குதலில் காயமடைந்த பிரபு, மணிமாறன், காளிமுத்து ஆகியோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையடுத்துஅடுத்தடுத்து வழிப்பறி சம்பவங்களில் ஈடுபட்ட மர்ம கும்பலை உடனடியாக கைது செய்ய கடலூர் மாவட்ட எஸ்பி ஜெயக்குமார் உத்தரவிட்டார். கடலூர் திருப்பாதிரிப்புலியூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரன் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு, குற்றவாளிகளை தீவிரமாக தேடி வந்தனர். அப்போது கடலூர் அருகே உள்ள எம்.புதூர் காச நோய் மருத்துவமனை அருகே ஒரு முந்திரி காட்டில் வழிப்பறி சம்பவத்தில் ஈடுபட்ட கும்பலின் தலைவன் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பேரில் அங்கு சென்ற போலீசார், இருசக்கர வாகனம் நின்றதை கண்டு அதன் அருகில் சென்றனர். அப்போது அங்கு மறைந்திருந்த ஒரு வாலிபர்திடீரென கத்தியுடன் வந்து திருப்பாதிரிப்புலியூர் தலைமை காவலர் கோபி என்பவரை கையில் வெட்டியுள்ளார். இதை தடுக்க சென்ற கணபதி என்ற காவலரையும் அவர் வெட்டினார். இதை பார்த்த போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரன் அந்த வாலிபரிடம் சரண் அடையுமாறு கூறினார். ஆனால் இதை கேட்காத அந்த வாலிபர் இன்ஸ்பெக்டர் சந்திரனையும் கத்தியால் வெட்ட முயன்றார். உடனே தற்காப்புக்காக வேறு வழியின்றி இன்ஸ்பெக்டர் சந்திரன் தனது கைதுப்பாக்கியால் 3 முறை அந்த வாலிபரை நோக்கி சுட்டார். இதில் இடுப்பு மற்றும் மார்பு பகுதியில் குண்டு பாய்ந்த அந்த வாலிபர் சம்பவ இடத்திலேயே மயங்கி விழுந்துள்ளார்.

இதையடுத்து போலீசார் அவர்களின் ஜீப்பிலேயே அந்த வாலிபரை ஏற்றி கடலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். ஆனால் அவர் வரும் வழியிலேயே இறந்து விட்டதாக அரசு மருத்துவமனை மருத்துவர்கள் தெரிவித்தனர். பின்னர் என்கவுன்டர் செய்யப்பட்ட கொள்ளை கும்பல் தலைவன் குறித்து போலீசார் விசாரணை நடத்திய போது, அவர் புதுச்சேரி மாநிலம் திலாசுப்பேட்டை பகுதியை சேர்ந்த கோபி மகன் விஜய் என்கிற மொட்டை விஜய் (19) என்பதும், இவன்தான் வழிப்பறி சம்பவங்களில் ஈடுபட்ட கொள்ளை கும்பலின் தலைவனாக செயல்பட்டதும் தெரிய வந்தது. இவன் மீது கடலூர் மாவட்டத்தில் 3 வழக்குகளும், விழுப்புரம் மாவட்டத்தில் 5 வழக்குகளும், புதுச்சேரியில் 22 வழக்குகளும் என மொத்தம் 30 வழக்குகள் உள்ளது.

# தமிழகம் முழுவதும் வரும் 5ம் தேதி மின் நுகர்வோர் குறைதீர் கூட்டம்: மின்வாரியம் தகவல்




சென்னை, ஏப்.4

மின் வாரியம் வெளியிட்ட அறிக்கை:

மின் நுகர்வோர் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மின் கட்டணத் தொகை, மின் மீட்டர்கள், குறைந்த மின்னழுத்தம், சேதமடைந்த மின் கம்பங்கள் மாற்றுதல் உள்ளிட்ட அனைத்து மின்சாரம் தொடர்பான புகார்கள் இருப்பின், அவற்றை நிவர்த்தி செய்யும் பொருட்டு, வரும் 5ம் தேதி சனிக்கிழமை அன்று காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை தமிழகத்தில் உள்ள அனைத்து மின்வாரிய இயக்கம் மற்றும் பராமரிப்பு செயற்பொறியாளர்கள் (Executive Engineer/O&M Office) அலுவலகங்களிலும் ஒரு நாள் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பெறப்படும் மின் மீட்டர்கள், குறைந்த மின்னழுத்தம், சேதமடைந்த மின் கம்பங்கள் மாற்றுதல் உள்ளிட்ட அனைத்து மின்சாரம் தொடர்பான புகார்கள் மீது உடனடியாக தீர்வு காணப்பட்டு நுகர்வோர் மற்றும் பொதுமக்களுக்கு தீர்வு தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்படும். மின் நுகர்வோர் மற்றும் பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# பிஇ, பிடெக் படிப்பில் சேர வெளிமாநில மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்: அண்ணா பல்கலை. அறிவிப்பு

சென்னை, ஏப்.4

அண்ணா பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வளாகங்களான கிண்டி பொறியியல் கல்லூரி (சிஇஜி) அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி (ஏசிடி) மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி (எம்ஐடி) குரோம்பேட்டை, கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் கல்லூரி (எஸ்ஏபி) ஆகிய கல்லூரிகளில் 202526ம் ஆண்டு பி.இ., பி.டெக்., மற்றும் பி.பிளான் ஆகிய படிப்புகளில் சேர்வதற்கு cfa.annauniv.edu/cfa என்ற இணையதளம் மூலம் வருகிற 11ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம். ஜூன் 13ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். இதேபோல், தொழில் நிறுவனங்களின் கூட்டமைப்பு எனும் வகையின் கீழ் இதே படிப்புகளுக்கு மேற்சொன்ன கல்லூரிகளுக்கு cfa.annauniv.edu/cfa என்ற இணையதளத்தின் வாயிலாக ஜூன் 6 தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

# தேனீக்கள் கொட்டியதில் கேரள சுற்றுலா பயணி பலி

கூடலூர், ஏப்.4

ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகளில் பெரும்பாலானோர் ஊட்டி சாலையில் உள்ள ஊசி மலை காட்சிமுனை பகுதிக்கு சென்று அங்குள்ள இயற்கை காட்சிகளை பார்த்து ரசித்து செல்கின்றனர். இதே போல நேற்று மதியத்துக்கு மேல் வந்த சுற்றுலா பயணிகள் அங்குள்ள காட்சி முனைக்கு சென்றுள்ளனர். இதில் கேரள மாநிலம் கள்ளிக்கோட்டை பகுதியில் இருந்து காரில் வந்த வாலிபர்கள் சிலர் காட்சிமுனை பகுதிக்கு சென்றனர்.

அதில் ஜாகீர் (26), ஆசிப் (26) ஆகிய இருவரும் காட்சிமுனை பகுதியில் இருந்து பள்ளத்தில் உள்ள பாறை பகுதிகள் வழியாக இறங்கி கீழே சென்றனர். அங்குள்ள தேனீக்கூடு ஒன்றில் அவர்கள் கல் வீசியதாக கூறப்படுகிறது. இதில் கூட்டில்இருந்துகலைந்து வந்த தேனீக்கள் கொட்டியதில் ஜாகீர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் தங்கத்தில் செய்த மணி கண்டெடுப்பு



ஏழாயிரம்பண்ணை, ஏப்.4

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகே விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வில் சமீபத்தில் தோண்டப்பட்ட குழியில் தங்கத்தால் செய்யப்பட்ட மணி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தனது எக்ஸ் தளத்தில், ''வெம்பக்கோட்டை 3ம் கட்ட அகழாய்வில்பலஅரியவகை தொல்பொருட்கள் கிடைக்கப்பெற்ற நிலையில், தற்போது 2.04 மீட்டர் ஆழத்தில் தங்கத்தால் செய்யப்பட்ட மணி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்த மணி, 6 மிமீ சுற்றளவும், 4.7 மிமீ கனமும், 22 மி.கிராம் எடையும் கொண்டதாக உள்ளது.

இதுவரை வெம்பக்கோட்டை அகழாய்வில் தங்கத்தால் செய்யப்பட்ட 7 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது'' என பதிவிட்டுள்ளார்.

# டூவீலர் தீப்பிடித்து சிறுவன் கருகி சாவு: தாய், சகோதரி காயம்



பொன்னமராவதி, ஏப்.4

புதுக்கோட்டைமாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள உலகம்பட்டியை சேர்ந்தவர் மாணிக்கம். இவரது மனைவி பூஞ்சோலை(36). இவர்களது மகள் ரஞ்சிதா(17), மகன் ராஜீவ்(9). இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு பூஞ்சோலை தனது மகள், மகனுடன் டூ வீலரில் பொன்னமராவதிக்கு சென்று விட்டு வீட்டுக்கு திரும்பி கொண்டிருந்தார். டூவீலரை பூஞ்சோலை ஓட்டினார்.

அப்போது இரவு 8.30 மணியளவில் கேசராபட்டியில் வந்தபோது, எதிர்பாராதவிதமாகடூவீலரின் முன்பகுதி திடீரென பயங்கர சத்தத்துடன் தீப்பற்றி எரிந்தது.

இதனால், அதிர்ச்சி அடைந்த பூஞ்சோலை டூவீலரை நிறுத்தி இறங்க முயன்றபோது அவரும், மகளும் கீழே விழுந்தனர். இதில் மகன் மட்டும் டூவீலரின் முன்பகுதியில் மாட்டிக்கொண்டான். அதற்குள் டூவீலர் முழுவதும் தீ மளமளவென பரவியதில் ராஜீவ் மீது தீப்பிடித்து படுகாயமடைந்தான். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவன் சிகிச்சை பலனின்றி பலியானான். தாய், சகோதரி சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பினர்.

# பைக் மீது லாரி மோதல்; சென்னை திருமங்கலம் போலீஸ்காரர் பலி



ராணிப்பேட்டை, ஏப்.4

ராணிப்பேட்டை மாவட்டம், சிப்காட் அடுத்த மணியம்பட்டு கிராமத்தை சேர்ந்தவர் ஜெகன் (27). இவர் சென்னை திருமங்கலம் போக்குவரத்து காவல் நிலையத்தில் உதவி ஆணையருக்கு டிரைவராக வேலை செய்து வந்தார்.

இவருக்கு திருமணம் ஆகவில்லை.

இந்நிலையில், சொந்த ஊருக்கு வந்திருந்த போலீஸ்காரர் ஜெகன் நேற்று தனது பைக்கில் மணியம்பட்டு கிராமத்தில் இருந்து திருவலம் நோக்கி சென்றார். பெல் நிறுவனம் பஸ் நிறுத்தம் அருகே சென்ற போது, எதிரே வந்த லாரி எதிர்பாராதவிதமாக இவரது பைக் மோதியது. இதில், தூக்கி வீசப்பட்ட ஜெகன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்து சிப்காட் போலீசார் வழக்குப்பதிந்து லாரியை பறிமுதல் செய்து டிரைவரை தேடி வருகின்றனர்.

# ஜிம்னாசியாட் 2025 போட்டியில் பங்கேற்கும் தமிழக வீரர், வீராங்கனைகள் 6 பேருக்கு ரூ.15 லட்சம்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்

சென்னை: ஜிம்னாசியாட் 2025 போட்டியில் பங்கேற்கவுள்ள தமிழக விளையாட்டு வீரர், வீராங்கனை கள் 6 பேருக்கு ரூ.15 லட்சத்துக்கான காசோலையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். செர்பியா நாட்டில் வருகிற 4ம் தேதி (நாளை) முதல் 14ம் தேதி வரை சர்வதேச பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு நடத்தும் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஜிம்னாசியாட் 2025 போட்டி நடக்கிறது. இப்போட்டியில் டேக்வாண்டா, நடனம் ஆகிய பிரிவுகளில் தமிழ்நாட்டை சேர்ந்த 6 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர்.

துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில் நடந்த நிகழ்வில், செர்பியா நாட்டில் நடைபெற உள்ள சர்வதேச பள்ளி விளையாட்டு கூட்டமைப்பு நடத்தும் ஜிம்னாசியாட் 2025 போட்டியில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டை சேர்ந்த 6 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு விமான பயண கட்டணம், தங்குவதற்கான செலவுகள், போட்டியில் பங்கேற்பதற்கான கட்டணம், விசா கட்டணம், காப்பீட்டு கட்டணம், உணவுக்கான செலவுகள் என ஒவ்வொரு வீரருக்கும் தலா ரூ.2.50 லட்சம் வீதம் மொத்தம் ரூ.15 லட்சத்திற்கான காசோலையை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியில் இருந்து வழங்கினார். மேலும் போட்டிகளில் வெற்றி பெற வாழ்த்துகளை தெரிவித்தார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி மற்றும் பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். போட்டிகளில் பங்கேற்க தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதி உதவி தேவைப்படும் விளையாட்டு வீரர்கள் www.t★champio★s.sdat.i★ என்ற இணையதளத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

4.4.2025

## மீன்பாசி குத்தகை உரிமம்; மீன்வள கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை: அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் தகவல்



பேரவையில் நேற்று வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய மானிய கோரிக்கைகள்மீதானவிவாதத்தில் கலந்து கொண்டு கீழ்வேளூர் நாகை மாலி(மார்க்சிஸ்ட் கம்யூ) பேசியதாவது:

விவசாயிகளின் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை தனியார் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு வழங்காமல், அரசே ஏற்று நடத்தலாம். இயற்கை பாதிப்பிற்கு தமிழக அரசு கோரும் நிதியினை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும். மீன்பாசி குத்தகை உரிமத்தை சென்னை உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி, உள்நாட்டு மீனவர்களுக்கு வழங்கிட கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன்: இன்றைக்கு மீன்வளத் துறையின் மூலம் அமைக்கப்பட்டிருக்கின்ற அனைத்து குளங்களிலும், மீன்பாசி குத்தகை உரிமம் அளிக்கும்போது, மீன்வள கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

## கோயில் நிலத்தை ஆக்கிரமித்து குடியிருப்பதற்கு வாடகை தராதவர்களை அப்புறப்படுத்த வேண்டும்: அறநிலையத்துறைக்கு ஐகோர்ட் உத்தரவு

சென்னை, ஏப்.4

தென்காசி அண்ணாமலை நாதர் கோயிலுக்கு சொந்தமான இடத்தில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு எதிராக அதே பகுதியை சேர்ந்த உடுமன் மொஹிதீன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில், அறநிலையத்துறை சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், அறநிலையத்துறையின் அனுமதி இல்லாமல் இடம் விற்பனை செய்யப்பட்டதாக 1997ம் ஆண்டு நில விற்பனை உத்தரவை அறநிலையத்துறை ஆணையர் ரத்து செய்தார். விற்பனை செய்யப்பட்ட கோயில் நிலத்திற்கு யாரும் உரிமை கோர முடியாது என்று தென்காசி மாவட்ட நீதிமன்றமும் உத்தரவிட்டது. இந்நிலையில், கோயில் நிலத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வரும் 81 ஆக்கிரமிப்பாளரிடம் வாடகை வசூலிக்க அறநிலையத் துறை முடிவு செய்தது. ஆனால், கோயில் இடத்திற்கு வாடகை தர முடியாது என்று ஆக்கிரமிப்பாளர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதால் உரிய பாதுகாப்பை வழங்குமாறு காவல்துறைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதிகள், ஆர். சுரேஷ்குமார், மரியாகிளாடி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, அறநிலையத்துறை சார்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் அருண் நடராஜன் ஆஜரானார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், கோயில் நிலங்களை யாரும் ஆக்கிரமிப்பு செய்ய அனுமதிக்க முடியாது. அனைவருக்கும் மீண்டும் நோட்டீஸ் அனுப்பி வாடகையை வசூலிக்க வேண்டும். வாடகை தர எதிர்ப்பு தெரிவிப்பவர்களை அப்புறப்படுத்தும் போது சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படாமல் இருக்க காவல்துறை போதிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டு விசாரணையை வரும் 21ம் தேதி தள்ளிவைத்தனர்.

## சிபிசிஎல் நிர்வாக இயக்குநராக சங்கர் பொறுப்பேற்பு

சென்னை, ஏப்.4

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (சிபிசிஎல்) நிறுவனத்தில் சமையல் எரி வாயு, மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல், எண்ணெய், மெழுகு மற்றும் தார் ஆகிய பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன் நிர்வாக இயக்குநராக சங்கர் நேற்று பொறுப்பேற்றார். இவர், வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இயந்திர பொறியாளர். இந்தியாவின் எரிசக்தித் துறையில் சிபிசிஎல் நிறுவனத்தின் நிலையை வலுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளார். 2020ம் ஆண்டு சிபிசிஎல்வாரியத்தில் இயக்குநராக (தொழில்நுட்ப) நியமிக்கப்பட்டார். தொடர்ந்து, 2024ம் ஆண்டு டிசம்பரில் நிர்வாக இயக்குநராக பொறுப்பு வகித்து வந்தார்.

சிபிசிஎல் நிறுவனத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துள்ளார். இவரது தலைமையின் கீழ், சிபிசிஎல் நீடித்த லாபம் அடைந்துள்ளது, இது நிறுவனத்தின் நிலையை 'பி' லிருந்து 'ஏ' நிறுவனமாக உயர்த்த வழி வகுத்தது. சங்கர் முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு தலைமை தாங்கினார், புதிய மதிப்பு கூட்டப்பட்ட மற்றும் நிலையான தயாரிப்புகளை அறிமுகப்படுத்தினார்.



தொழில்துறை கல்வி ஒத்துழைப்பின் வலுவான ஆதரவாளரான இவர், ஐஐடி மெட்ராஸ் மற்றும் பிற புகழ்பெற்ற நிறுவனங்களுடன் கூட்டாண்மையை வளர்த்து, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் புதுமைகளை ஊக்குவித்துள்ளார். பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் திறவன செயல்பாட்டில் அவர் செலுத்தும் கவனத்தால் இந்தியா எரிசக்தித்துறையில் சிபிசிஎல் தனது பங்கை தொடர்ந்து வலுப்படுத்தும் என சிபிசிஎல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## நான் முதல்வன் திட்டம்; வங்கி பணிகளுக்கான உறைவிட பயிற்சி திட்டத்தில் 73 சதவீதம் பேர் தேர்ச்சி: தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் தகவல்

சென்னை, ஏப். 4

2024,25ம் ஆண்டுக்கான தமிழ்நாடு பட்ஜெட் உரையில், ஒன்றிய பணியாளர் தேர்வாணையம், ரயில்வே மற்றும் வங்கிப் பணித்தேர்வுகளில் தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிகம் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் மாணவர்களுக்கு உண்டு, உறைவிட வசதியோடு கூடிய தரமான ஆறுமாத காலப் பயிற்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 24.9.2024 அன்று நான் முதல்வன் வங்கிப் பணிகளுக்கான உறைவிட பயிற்சி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற 360 மாணவர்களில் 266 பேர், பாரத ஸ்டேட் வங்கியின் (எஸ்பிஐ) கிளார்க் பணிக்கான முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இத்திட்டம், துவங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே பயிற்சி பெற்றவர்களில், 73சதவீதம் பேர், ஸ்டேட் வங்கியின்கிளார்க்பணிக்கான முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்கள், ஏப்ரல் 10 மற்றும் 12ம் தேதி நடைபெற உள்ள முதன்மை தேர்வில் கலந்துகொள்ள பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த திட்டம், கடந்தாண்டு பட்ஜெட் உரையில் முதன்முறையாக அறிவிக்கப்பட்டு, சேலம் மற்றும் விருதுநகர்மாவட்டங்களில் நடந்து வருகிறது.

மேலும், ஆண்டுதோறும் 6 மாத காலம் வழங்கப்படும் இந்த உறைவிட பயிற்சிக்கான பயனாளிகள் நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழகத்தால் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது என மேம்பாட்டு கழகம் தெரிவித்துள்ளது.

## உரிய காலத்திற்குள் பணியை முடிக்காததால் ஒப்பந்ததாரருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.2000 அபராதம்: நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா உத்தரவு

சென்னை, ஏப்.4

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சி 126வது வார்டு ஆண்டிமான்ய தோட்டம் திட்டப்பகுதியில் ரூ.118.53 கோடி மதிப்பீட்டில் 702 அடுக்குமாடி குடியிருப்பு கட்ட ராமலிங்கம் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (பி) லிமிடெட், முன்புனையப்பட்ட கான்கிரீட் தொழில்நுட்பத்துடன் ஏ,பி,சி,டி என 4 தொகுப்புகளாக ஒப்பந்தம் போடப்பட்டு 18 மாத ஒப்பந்த காலமாக 23.8.2024 அன்று திட்டப்பகுதியை நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.



7 மாத காலத்தில் 45 % கட்டுமானபணிநிறைவடைந்து இருக்க வேண்டும். தற்போது வரை 15 % மட்டுமே பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதனால் குடியிருப்புதாரர்கள் காலிசெய்து 2 ஆண்டுகள் ஆகிய நிலையிலும் தமிழ்நாடு

நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் குறித்த நேரத்தில் வீடு வழங்க முடியாத நிலையில் உள்ளது. உரிய காலத்திற்குள் கட்டுமான பணியை முடிக்காத காரணத்தால் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியமேலாண்மை இயக்குநரால் கட்டண அபராதமாக நாள் ஒன்றிற்கு ரூ. 2000 விதிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்த காலத்தில் கட்டுமான பணியை எட்டும் வரை இந்த அபராத கட்டணம் தொடரும். பி.ஆர்.என் கார்டன் திட்டப்பகுதியில் ரூ.85 கோடி மதிப்பீட்டில் 503 அடுக்குமாடி குடியிருப்புகள் தூண் மற்றும் 9 தளங்களுடன் தங்கள் நிறுவனத்திடம் 18.12.2024 அன்று திட்டப்பகுதி ஒப்படைக்கப்பட்டது. தற்போது 20% பணி முடிந்திருக்க வேண்டும். ஆனால் 11% பணிகள் மட்டுமே முடிவடைந்துள்ளது. இந்த தாமதம், உரிய நேரத்தில் நிறைவடையாமைக்கு வழிவகுக்கிறது. இதன் காரணமாக, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஒப்பந்தக் காலக்கட்டத்தை மீறி தாமதம் செய்ததற்காக ஒப்பந்ததாரருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பி உள்ளது. உங்கள் நிறுவனத்தினால் ஏற்கனவே ஒப்பந்தத்தின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட பணிகளை விரைவாக முடிக்க வேண்டும். தாமதம் தொடர்ந்தால் ஒப்பந்த விதிமுறைகளின் படி கூடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

## நடிகை நிஹாரிகா தயாரிக்கும் 2வது படம்



பிரபல தெலுங்கு நடிகை நிஹாரிகா கொனிடேலா. இவர் தனது தயாரிப்பு பேனரான பிங்க் எலிபென்ட் பிக்சர்ஸ் மூலம் 'கமிட்டி குரோல்லு' என்ற படத்தை தயாரித்து தயாரிப்பாளரானார். அந்த படத்தின் வெற்றிக்குப் பிறகு, அவர் இப்போது மற்றொரு படத்தைத் தயாரிக்க உள்ளார். இதில் மேட் ஸ்கொயர் நடிகர் சங்கீத் சோபன் கதாநாயகனாக நடிக்கிறார். இந்த படத்தை மானசா ஷர்மா இயக்க உள்ளார். மானசா இப்படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமாக இருக்கிறார். இவர் முன்பு பிங்க் எலிபென்ட் பிக்சர்ஸின் வெப் தொடரான "ஒரு சின்ன பேமிலி ஸ்டோரி"ல் கிரியேட்டிவ் இயக்குனராகவும், "பெஞ்ச் லைப்"ல் இயக்குனராகவும் பணியாற்றி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கார்த்திக் ஆர்யனின் அடுத்த படத்தில் ஸ்ரீலீலாவுக்கு பதில் இந்த நடிகையா?



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் ஸ்ரீலீலா. இவர் தற்போது தமிழில் சிவகார்த்திகேயன் நடிக்கும் பராசக்தி படத்தில் நடித்து வருகிறார். இது இவர் நடிக்கும் முதல் தமிழ் படமாகும்.

இதற்கிடையில், பாலிவுட்டில் கார்த்திக் ஆர்யனுக்கு ஜோடியாக ஸ்ரீலீலா அறிமுகமாக இருக்கிறார். அனுராக் பாசு இயக்கும் இப்படம் வரும் தீபாவளிக்கு வெளியாக இருக்கிறது. இதுமட்டுமில்லாமல் கார்த்திக் ஆர்யன் நடிப்பில் கடந்த 2019ம் ஆண்டு வெளியான 'பதி பத்னி அவுர் வோ' படத்தின் 2ம் பாகத்தில் ஸ்ரீலீலா நடிக்க இருப்பதாகவும் தகவல் வெளியானது.

இந்நிலையில், இப்படத்தில் ஸ்ரீலீலாவுக்கு பதில் பிரபல பாலிவுட் நடிகை ரவீனா தாண்டனின் மகள் ராஷா ததானி நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது. விரைவில் இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ராஷா ததானி, கடந்த ஜனவரி மாதம் 17ம் தேதி வெளியான 'ஆசாத்' படத்தின் மூலம் பாலிவுட்டில் அறிமுகமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'தள்ளிப்போகிறதா காந்தாரா: சாப்டர் 1' ? வைரலாகும் வீடியோ




ரிஷப் ஷெட்டி நடிப்பில் கடந்த 2022ம் ஆண்டு வெளியான 'காந்தாரா' படத்தின் வெற்றியை தொடர்ந்து, தற்போது அதன் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. 'காந்தாரா: சாப்டர் 1' என பெயரிடப்பட்டுள்ள இதன் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதற்கிடையில், சமீபகாலமாக இப்படத்தின் அப்டேட் எதுவும் வெளியாகாமல் இருப்பதால் படம் ரிலீஸ் ஆவதில் தாமதம் ஏற்படும் என்று இணையத்தில் வதந்திகள் பரவின. இந்நிலையில், ரிலீஸ் தேதியை உறுதிப்படுத்தவும், ஒத்திவைப்பு பற்றிய வதந்திகளை நிராகரிக்கும் விதமாகவும் ஒரு வீடியோ ஒன்று வெளியாகி இருக்கிறது.

அதில், ",காந்தாரா:சாப்டர்1 தள்ளிப்போகிறதா?" என்ற வாசகம் இடம்பெற்றிருந்தது. அதற்கு பிறகு 'இல்லை' என்ற பதில் வெவ்வேறு மொழிகளில் உள்ளது. இதன் மூலம் காந்தாரா: சாப்டர் 1 அக்டோபர் மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 'கங்குவா'வை தொடர்ந்து நானி படத்தில் கேமியோ ரோலில் நடிக்கிறாரா கார்த்தி?|'

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் கார்த்தி. இவர் தற்போது 'சர்தார் 2' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது. இதற்கிடையில், சூர்யாவின் 'கங்குவா' படத்தில் கேமியோ ரோலில் நடித்திருந்த கார்த்தி அடுத்ததாக நானியின் 'ஹிட் 3' படத்தில் கேமியோ ரோலில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.



'ஹிட் 4' படத்தில் கார்த்தி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க உள்ளதாகவும், இதனால் அதற்கான லீடுக்காக அவர் ஹிட் 3 படத்தில் கேமியோ ரோலில் நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

நடிகர் நானி 'சூர்யாவின் சனிக்கிழமை' படத்தையடுத்து 'ஹிட் 3' படத்தில் நடித்து வருகிறார். கே.ஜி.எப் நடிகை ஸ்ரீநிதி ஷெட்டி கதாநாயகியாக நடித்திருக்கும் இப்படத்தை பிரபல இயக்குனர் சைலேஷ் கொலானு இயக்குகிறார். பிரசாந்தி திபிர்னேனி தயாரிப்பில் உருவாகும் இப்படம் மே மாதம் 1ம் தேதி திரைக்கு வருகிறது.

## ஐபிஎல் 2025: பெங்களூரு அணிக்கு முதல் தோல்வி, குஜராத் அசத்தல் வெற்றி



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெறும் 14வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியுடன் குஜராத் டைட்டன்ஸ் அணியும் மோதின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற குஜராத் அணியின் கேப்டன் சுப்மன் கில் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 169 ரன்கள் எடுத்தது. இதையடுத்து, 170 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட்டிங்கை தொடங்கிய குஜராத் டைட்டன்ஸ் அணி துவக்கம் முதலே அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. துவக்க ஆட்டக்காரர் சாய்சுதர்சன் 49 ரன்கள் அடித்தார். அதிரடியாக விளையாடி பந்துகளை சிக்சர்களுக்கும் பவுண்டரிகளுக்குமாக பறக்க விட்ட பட்லர் கடைசி வரை ஆட்டமிழக்காமல் நின்று 39 பந்துகளில்73 ரன்கள் எடுத்தார். இதன் மூலம் குஜராத் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. நடப்பு ஐபிஎல் தொடரில் பெங்களூரு அணி பெற்ற முதல் தோல்வி இதுவாகும்.

## ஐ.பி.எல். கிரிக்கெட்; குஜராத் அணிக்கு 170 ரன்கள் இலக்கு நிர்ணயித்த பெங்களூரு



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெறும் 14வது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியுடன் குஜராத் டைட்டன்ஸ் அணி மோதுகிறது.

இதில் டாஸ் வென்ற குஜராத் அணியின் கேப்டன் சுப்மன் கில் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த பெங்களூரு அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய பிலிப் சால்ட் 14 ரன்களும், விராட் கோலி 7 ரன்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

கேப்டன் ரஜத் படிதார் 12 ரன்களில் அவுட் ஆகி வெளியேறினார். நிதானமாக ஆடி அரைசதம் கடந்த லியாம் லிவிங்ஸ்டன் 54 ரன்களில் கேட்ச் ஆனார். அதிரடியாக விளையாடி 5 பவுண்டரிகள், 1 சிக்ஸர் விளாசிய ஜிதேஷ் சர்மா 33 ரன்களில் விக்கெட்டை இழந்தார். இறுதி ஓவர்களில் அதிரடி காட்டிய டிம் டேவிட் 3 பவுண்டரிகளும், 2 சிக்ஸர்களும் விளாசி பெங்களூரு ரசிகர்களுக்கு விருந்தளித்தார். இறுதியாக பெங்களூரு அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 169 ரன்கள் எடுத்தது.

குஜராத் அணியில் அதிகபட்சமாக முகமது சிராஜ் 3 விக்கெட்டுகளும், சாய் கிஷோர் 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். தொடர்ந்து குஜராத் அணி, 170 ரன்கள் என்ற இலக்கை நோக்கி விளையாடி வருகிறது.

## பஞ்சாப் அணிக்கு எதிரான தோல்வி: பிட்ச் பராமரிப்பாளரை விமர்சித்த ஜாகீர் கான்

ஐ.பி.எல்.தொடரில் லக்னோவில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் லக்னோ அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த லக்னோ 20 ஓவர்களில் 7 விக்கெட்டை இழந்து 171 ரன்கள் எடுத்தது. லக்னோ தரப்பில் அதிகபட்சமாக நிக்கோலஸ் பூரன் 44 ரன் எடுத்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து 172 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த பஞ்சாப் அணி 16.2 ஓவரில் 2 விக்கெட்டை மட்டும் இழந்து 177 ரன்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. பஞ்சாப் தரப்பில் ப்ரப்சிம்ரன் சிங் 69 ரன் எடுத்தார். இந்த நிலையில் , இந்த தோல்விக்கு பிட்ச் பராமரிப்பாளரை லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணியின் ஆலோசகர் ஜாகிர் கான் விமர்சித்துள்ளார் ..இது தொடர்பாக அவர் கூறியதாவது,

இது எங்களது சொந்த மைதானத்தில் நடந்த போட்டி போலவே இல்லை. இது சொந்த மைதானம் என்று சொல்லும் நிலையில் எனக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. ஐபிஎல் தொடரில் மற்ற அணிகள் சொந்த மைதானத்தில் சில சாதகங்களைப் பெறுகின்றன. ஆனால், இங்கு பிட்சை உருவாக்கிய ஊழியர் இது எங்களின் சொந்த மைதானம் என்பதைச் சிந்திக்காமல் செயல்பட்டது போல உள்ளது. பஞ்சாப் அணியின் பிட்ச் ஊழியர் இந்த பிட்சை தயாரித்தது போல உள்ளது. இது குறித்து நாங்கள் சீக்கிரம் ஒரு முடிவை எடுக்க வேண்டும். இதுபோன்ற சம்பவம் நடக்கும் முதல் மற்றும் கடைசி போட்டியாக இது இருக்கும் என நம்புகிறேன். ஏனெனில், லக்னோ அணியின் ரசிகர்களும் ஏமாற்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள் அதிக எதிர்பார்ப்புடன் இங்கே வந்தார்கள். முதல் சொந்த மைதானப் போட்டி என்ற ஆர்வத்துடன் இருந்தார்கள். அவர்களும் ஏமாற்றத்தில் இருக்கிறார்கள். என ஜாகீர் கான் கூறியுள்ளார்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.